(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT III, TIRUPATTUR

# CC No. 08/2018

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.PW 9 Page.No. /2021

| | | | |
|---|---|---|---|
| Name : | கனகமணி | Caste : | |
| husband Name: | சம்பத் | Calling: | கூலி |
| Village: | முத்துகுமரமலை | Religion: | |
| Taluk: | வேலூர் | Age | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated : 23.09.2021.

முதல் விசாரணை:-

நான் முத்துகுமரமலை கிராமத்தில் வசிக்கிறேன்.கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி எனது தம்பி. லாவண்யா அவரது மனைவி. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

ஆஜர் எதிரிக்கும் லாவண்யாவிற்கும் திருமணம் முடிந்து அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் என்றால் சரிதான். அந்த இரண்டு குழந்தைகளும் தற்போது உயிரோடு இல்லை என்றால் சரிதான். லாவண்யாவிற்கும் ஆஜர் எதிரிக்குமிடையே ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக லாவண்யா குழந்தைகளை கிணற்றில் போட்டுவிட்டு தானும் தற்கொலைக்கு முயன்றார் என்றால் எனக்கு சம்பவத்திற்கு பிறகு தான் அதுப்பற்றி எனக்கு தெரியும். போலீஸ் விசாரணையில் கடந்த 01.02.2010ம்தேதி நான் எனது அம்மாவீட்டிற்கு வந்திருந்த போது, லாவண்யா குழந்தைகளை கிணற்றில் போட்டுவிட்டு தற்கொலைக்கு முயன்றதாக என்னுடைய மற்றொரு தம்பி கிருபானந்தம் லாவண்யாவை மட்டும் காப்பாற்றியதாகவும் அதற்குள் குழந்தைகள் கிணற்றில் மூழ்கி இறந்துவிட்டதாகவும் கூறியுள்ளேன் என்றால் போலீசார் என்னிடம் எதுவும் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரி எனது தம்பி என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்றும் பொருட்டு அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எ.த.கு.வி:-

இல்லை